

மங்களூரை சேர்ந்த சச்சினை கேஎம்சிஎச் மருத்துவர் அருள்செல்வன் பரிசோதனை செய்கிறார். உடன் டீன் குமரன் உட்பட பலர்.

### நரம்பு பாதிப்பால் பாதிக்கப்பட்டு

# வீல்சேரில் முடங்கி கிடந்தவர் 12 ஆண்டுக்கு பிறகு நடந்தார்

**கோவை, அக்.11:** மங்களூரைச் சேர்ந்தவர் சச்சின்(23). இவர் கடந்த 12 ஆண்டுகளுக்கு முன் மோட்டார் நியூரோபதி எனும் நரம்பு பாதிப்பு நோயால் பாதிக்கப்பட்டார். கடந்த 12 ஆண்டாக நடக்க முடியாமல் வீல்சேரில் முடங்கி கிடந்தார். இருந்தாலும் விடாமுயற்சியாக பி.ஈ படித்து முடித்தார். இவர் சமீபத்தில் கோவை கே.எம்.சி.எச் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

நரம்பியல் பரிசோதனை மற்றும் சிகிச் சை நிபுணர் மருத்துவர் அருள் செல்வன் சச்சினை பரிசோதித்தார். 2 மாத தொடர் சிகிச்சைக்கு பிறகு சச்சின் நடக்க ஆரம்

## கேஎம்சிஎச் மருத்துவர்கள் சாதனை

பித்துள்ளார். இது குறித்து கேஎம்சிஎச் தலைவர் நல்ல பழனிசாமி கூறிதாவது: சச்சினின் மனத்திடத்தையும் விடா முயற்சியையும், எங்கள் மருத்துவமனையின் உயர் தர சிகிச்சை நுட்பத்தையும் பாராட்டுகிறேன். இது போன்றநரம்புகோளாறுகளை ஆரம்ப நிலையிலேயே மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தி கொண்டு சரியான சிகிச்சை பெற்றால் பெரும் விளைவுகளை தவிர்க்கலாம். என்றார். பெரிபரல் நியூரோபதி எனும் இத்தகைய நரம்பு பாதிப்புகள் நரம்பு, மூளை, தண்டுவட செயல்பாடுகளை முடக்கிவிடும். நீரிழிவு, நீண்ட கால மது பயன்பாடு, வைட்டமீன் பி12 குறைபாடு புற்று நோய்க்கான மருந்துகள் ஆகியவற்றால் இத்தகைய நரம்பு கோளாறு ஏற்படும். கால், கைகளில் மரமரப்புத் தன்மை, ஊசி குத்துவது போன்ற உணர்வு, நாளடைவில் பஞ்சுப் பொதி மேல் நடப்பது போல் உணர் தல், சட்டை பட்டன் போட முடி யாமை, எதையும் பிடித்து கொள்ள முடியாமல் கை நழு வுதல், தள்ளாட்டம் போன்ற தளர்வு நிலைக்கு உடல் ஆட்படுவது இந் நோய்க்கான அறிகுறியாகும்.